உ

சிவமயம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்.

இராமலிங்கப்பிள்ளை

அவர்கள்.

# திருவாய்மலர்ந்தருளியதிருத்தணிகை,

# சுப்பிரமணியர்பதிகங்கள்.

இஃது.

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்.

பரிசோதித்து,

வே-சுந்தரம்பிள்ளைகேட்டுக்கொண்டபடி

புரசபாக்கம்

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபானுவ௵

## திருச்சிற்றம்பலம்.

## திருத்தணிகை.

# சுப்பிரமணியர்பேரில்பதிகங்கள்.

சீர்பூத்தவருட்கடலே கரும்பேதேனே செம்ப
கேயனைத்துகுலதெய்வமேநற், கூர்பூத்தவெண்மல
கிலைகயரசேசாந்துணைக்குன்றே தணிகைமலைக்கே
வேஞானப், பேர்பூத்தநின்புகழைக்கருதியேழை
யழைக்கவருள்செய்வாயோபிழையைநோக்கிப், பா
பூத்தபவத்திலுறவிடுவனென்செய்கேன் பாவியே
ந்தோவன்பயந்திரோனே. (

தீராதுயர்க்கடலிலழுந்திநாளுந் தியங்கியழுதே
ங்குழிந்தச் சேய்க்குநீகன், பாராதசெயலெனவே
யெத்தாயெந்தாய்பாவியெனவிட்டனையோ பன்
ளாக, வேராயவருள் தருவாயென்றேயமாந் திரு
தேனே யென்செய்கேன் யாருமில்லேன் சீராருந்
ணிகைவரை யமுதேயாகித்தெய்வமேநின்கருத்தை
த்தெளிந்திலேனே. (௨

தெளிக்குமறைப்பொருளேயென்னன்பேயெ
றன்செல்வமே திருத்தணிகைத்தேவேயன்பா, களி
குமறைக்கருத்தேமெய்ஞ்ஞான நீதிக்கடவுளேநி

னருளைக்காணேனின்னும், சளிக்குமிழுத்துயருமிய
மன் கயிறு"மினைத்தொடர்பு மலத்தடர்பு மனைச்சேர்
வமந்தோவளிக்கு மெனையென்செயுமோவறியே னி
ன்றனடித்துணையேயுறுதுணைமற்றன்றியுண்டோ. ()
உண்டாயவுலகுயிர்கடம்மைக்காக்கவொளித்திரு
ந்தவவ்வுயிர்வினைகளொருங்கேநாளும், கண்டாயேயி
வ்வேழகலக்கு தன்மைகாணுமேயோபன் னிரண்டுக
ண்கள்கொண்டோய் கண்டாத நின்னருட்குத்தகு
மோவிட்டாற்றருமமோதணிகைவரைத்தலத்தின்வா
ழ்வேவிண்டாதிதேவர்தொழு முதலே முத்திவித்தே
சொற்பதங்கடந்தவேற்கையானே, (௩)
வேகயாதவன்புடையாரங்கைமேவுங்கனியேயென்
னுயிரேயென்கண்ணேயென்றும், பொய்யாதபூரண
மேதணிகைஞானப்பொருளே நின்பொன்னருளை
ப்போதியான்பெற்றால் உய்யாதகுறையுண்டோ து
யர்சொல்லாமலோடுமேயமன்பாச மொய்துபோ
மென், ஐயா நின்னடியரொடும்வாழ்வெனிங்கானை
யல்லாலெனக்கின்றருள்செய்வாயே. (௪)
வாய்குழுனைகருளன்றேயத்தோநாளும் வழிபார்
த்திங்கிளைக்கின்றேன்வருந்தும்பொல்லா: நோய்க்கு
மூழ துயர்க்குமிலக்கானேன்மாட்கிம நாந்தேநின்ன
ருள்காணேனுவலுப்பாசத், தேய்க்குமவன்வரிவலனு

க்கியாதுசொல்வேனென்செய்கேன்றுனையறியாமே
ழையேனே, தூய்க்குமார குருவே தென்றணிகை
வுஞ்சோதியேயிரங்காயோதொழும்பாளற்கே. (க

ஆளாயோதுயரளக்கர்வீழ்ந்துமாழ்கினையயாவே
வென்னுமுறையையற்றோசற்றுங், கேளாயோ
ன்செய்கேனெந்தாயன்பர்கிளத்துமுனகருளென
குக்கிடையாதாகில், நாளாயோநடுவன்வரிலென்
ய்வானே நாயினேனென்சொல்வேனுனுவேனே
தோளாவோர்மணியேதென்றணிகை மேவுஞ்சுடர்
யென்னறிவேசிற்சுகங்கொள்வாழ்வே (௭

வாழ்வேநற்பொருளேநன்மருந்தேஞான வாரி
யேதணிகைமலைவள்ளலேயான் பாழ்வேலையெனு
கொடியதுயருண்மாழ்கிப்பதைத்தையாமுறையே
நின் பதத்துக்கென்றே, காழ்வேனீதறிந்திலையோ
யேன் மட்டுந்தயவிலையோ நான்பாவிதானோ யார்
குள் ஆழ்வேனென் றயல்விட்டானிதியேயோ வ
சேரவிங்கென்செய்கேனண்ணலண்ணே. (அ

அண்ணேவேநின்னடியையன்றிவேறாதரவி
கறியே நெஞ்சழிந்து துன்பாற், புண்ணாக வன்ற
னையின்னும்வஞ்சர்பாற்போய்ப்புலர்ந்து முகவா
டமுடன்புலப்பிநிற்கப், பண்ணேதேயாவவன்ட
விக்குளாம்படுபாவி யென்றென்னைப் பரிந்து

ளா, என்றுதேயாங்மிகவுமேழைகண்டாயிசைக்கரி
யதணிகையில்வீற்றிருக்குங்கோவே (கூ)

கோவேநற்றணிகை வரையமர்ந்தஞானக் குலம
ணியே குகனேசற்குருவேயார்க்குந், தேவேயென்
விண்ணப்பமொன்று கேண்மோசிந்தைதனிலினைக்
கவருள்செய்வாய்நாளும், பூவேயுமயன்றிருமால்புல
வர்முற்றும்போற்றுமெழிற்புரந்தரனெப்புவியுமோ
ங்கச், சேவேறும்பெருமானிங்கிவர்கள் வாழ்த்தல்செ
ய்துவக்குநின்னிரண்டுதிருத்தாட்சே. (ய)

முற்றிற்று.

உ

## திருத்தணிகை,
## சுப்பிரமணியர்பேரில்பதிகம்.

ஆறுமுகப்பெருங்கருணைக்கடலெதெய்வயானைம
கிழ்மணிக்குன்றேயரசேமுக்கட் பெறுமுகப்பெரு
ஞ்சுடர்க்குட்சுடரோசெவ்வேள்பிடித்தருளும்பெரு
ந்தகைமேய பிரமஞானம் வீறுமுகப் பெருங்குணத்
தோரிதையத்தோங்கும்விளக்க மெயானந்தவெள்ள
மெமுன்றேறுமுகப்பெரியவருட்குருவாய்யென்னை
ச்சிறுகாலையாட்கொண்டதேவதேவே. (க)

கண்ணிமதிபுனைந்தசடைக் கனியேமுக்கட்கரும்பேயென்கண்ணேமெய்க்கருணைவாழ்வே, புண்ணியநன்னிலையுடையோ ருளத்தில்வாய்க்கும் புத்தமுதேயாநந்தபோகமேயென், றெண்ணியமெய்த்தவர்க்கெல்லா மெளிதிலீந்தயென்னரசேயாறு முகத்திறையாய்வந்தோ, திண்ணியவென்மனமுருக்கிக்குருவாயென்னைச்சிறுகாலையாட்கொண்டதேவதேவே.

நின்னிருதாட்டுணைப்பிடித்து வாழ்கின்றேனு னின்னையலாற்பின்னையொருநேயங்காணேன், என்னையினித் திருவுளத்தினினைந்தோ நானேழையினு மேழைகண்டா யெந்தாயெந்தாய் பொன்னையன்றிவிரும்பாத புல்லர்தம்பாற் போகலொழித் துன்பதமேபோற்றும்வண்ணம், சின்னமளித்தருட்குருவாயென்னைமுன்னேசிறுகாலையாட்கொண்டதேவதேவே.

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பானேயங் காண வைத்தாயிவ்வுலகங்காணவென்றே, ஒல்லும்வகையறிவித்தாயுள்ளேநின்றென்றுடையானே நின்னருளாமுதவுகின்றாய், இல்லையெனப்பிறர்பாற்சென்றிரவாவண்ணமேத்தவளித்தாயிரக்க மென்னேயென்னே செல்வவருட்குருவாகிநாயினேனைச் சிறுகாலையாட்கொண்டதேவதேவே. (௩

எந்தைபிரானென்னிறைவனிருக்கவிங்கே யென்னகுறைநமக்கென்றே யிறுமாப்புற்றே, மந்தவுலகினிற்பிறரையொருகாசுக்குமதியாமனின்னடியேமதிக்கின்றேனான், இந்தவடியேனிடத்துன்றிருவுளந்தானெவ்வாறோவறிகிலேனேழையேனைச், சிந்தைமகிழ்ந்தருட்குருவா யுள்ளேநின்று சிறுகாலையாட்கொண்டதேவதேவே, (௫)

மாறாதபெருஞ் செல்வயோகர்போற்று மாமணியேயாறுமுக மணியேநின்சீர், கூறாதபுலவாமையையுடையார்தம்மைக்கூடாதவண்ணமருட்குருவாய்வந்து, தேறாதநிலையெல்லாந்தேற்றியோங்குஞ் சிவஞானச்சிறப்படைந்து நிடைப்புநீங்கி, சீறாதவாழ்விடைநான்வாழவென்னைச் சிறுகாலை யாட்கொண்டதேவதேவே, (௬)

கற்றறிந்த மெய்யுணர்ச்சி யுடையோருள்ளக்கமலத்தேயோங்குபெருக்கடவுளேநின், பொற்றகைமாமலரடிச்சீர்வழுத்துகின்றபுண்ணியர் தங்குழுவிதெனைப்புகுத்தியென்றுட், உற்றவருட்சிந்தனைதந் தின்பமேவியுடையாயுன்னடியவனென் றோங்குவண்ணம்சிற்றறிவையகற்றியருட்குருவாயென்னைச்சிறுகாலையாட்கொண்டதேவதேவே, (௭)

ஞாலமெலாம்படைத்தவனைப் படைத்த முக்
ஞாயகனேவடிவேற்கைநாதனேநான், கோலமெ
ங்கொடியேனற்குணமொன்றில்லேன்குற்றமே
ழைந்தேனிக்கோதுளேனைச், சாலமெலாஞ்செய
டவார்மயக்கிநீக்கிச்சன்மார்க்கமடையவருட்டரு
யஞானச்,சீலமெலாமுடையவருட்குருவாயென்னை
ச் சிறுகாலையாட்கொண்டதேவதேவே. (

கற்பனையெயெனுமுலகச்சழக்கிலந்தோ காதூ
றிமயங்குகின்றகடையனேனைச், சொற்பனமிவ்வு
லியற்கையென்றுநெஞ்சந் துணிவுகொளச் செய
த்துன்னைப்போற்றுனை, அற்பகலுநினைந்துகனி,
துருஞானவானந்தபோகமுறவருளல்வேண்டு
சிற்பரசற்குருவாயவந்தென்னை முன்னே சிறுகாலை
யாட்கொண்டதேவதேவே, (

பன்னிருகண்மலர்மலர்ந்தகடலேஞானப்பாஞ்
டோயாறு முகம்படைத்தகோவே, என்னிருகண்
ணியேயென்றாயேயென்னை யீன்றனே யென்னை
சேயென்றன்வாழ்வே,மின்னிருவர்புடைவிளங்க
யின்மீதேறிவிரும்பு மடியவர்காண மேவுந்தே
சென்னிமிசையினடிமலர்வைத்தென்னைமுன்னே சி
றுகாலையாட்கொண்டதேவதேவே. (

திருச்சிற்றம்பலம்-முற்றிற்று.